914

सत्यमेव जयते


# भारत का राजपत्र
# The Gazette of India
# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्रधिकार प्राकाशित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सूक्वार, 26 ऐपरल 1996 / 1918 शक

New Delhi, Friday, 26th April 1996

*புது தில்லி, 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26ஆம் தேதி, வெள்ளிக்கிழமை*


## Ministry of Law, Justice and Company Affairs

(Law Department)

New Delhi, the 26th April 1996

## *சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்*

*(சட்டத்துறை)*

*புது தில்லி, 26, ஏப்ரல் 1996*

The translation in Tamil of the Destruction of Records Act, 1917 (5 of 1917), The Haj Committee Act, 1959 (51 of 1959), The National Highways Act, 1956 (48 of 1956), The Armed Forces (Emergency Duties) Act, 1947 (15 of 1947), The Copy Rights Act, 1957 (14 of 1957), The Muslim Women (Protection of Rights of Divorce) Act, 1986 (25 of 1986), The Bankers' Books Evidence Act, 1891 (18 of 1891), The Antiquities and Art Treasures Act, 1972 (52 of 1972), The Bonded Labour System (Abolition) Act, 1976 (19 of 1976), The Interest Act, 1978 (14 of 1978), The Disputed Elections (Prime Minister and Speaker) Act, 1977 (16 of 1977) are hereby Published under the authority of the President and shall be deemed to be the authorised translations thereof in Tamil under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

*பதிவணங்களை அழித்தல் சட்டம், 1917 (5/1917), ஹஜ்குழுச் சட்டம், 1959 (51/1959), தேசிய நெடுஞ்சாலைகள் சட்டம், 1956 (48/1956), ஆயுதப்படையினர் (நெருக்கடி நிலைக்கடமைகள்) சட்டம், 1947 (15/1947), பதிப்புரிமைச் சட்டம், 1957 (14/1957), முஸ்லிம் பெண்கள் (மணமுறிவு மீதான உரிமைகள் பாதுகாப்புச்) சட்டம், 1986 (25/1986), வங்கியர் கணக்குப் புத்தகங்கள் சாட்சியச் சட்டம், 1891 (18/1891), தொல்பொருள்கள் மற்றும் கலைக்கருவூலங்கள் சட்டம், 1972 (52/1972), கொத்தடிமை வேலைமுறை (ஒழிப்புச்) சட்டம், 1976 (19/1976), வட்டிச் சட்டம், 1978 (14/1978), மறுத்து வாதிடப்படும் (தலைமை அமைச்சர் மற்றும் பேரவைத்தலைவர்) தேர்தல்கள் சட்டம், 1977 (16/1977) ஆகியவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகார உறுதிபெற்ற வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973)இன் பிரிவு 2இன் கூறு(அ)வின்படி இவையே தமிழில் அதிகார உறுதிபெற்ற வாசகங்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.*


**PRICE: Rs. 60.00**

# ஹஜ் குழுச் சட்டம், 1959

(சட்ட எண் 51/1959)[1]

[1959, டிசம்பர் 17]

சௌதி அரேபியா, சிரியா, ஈராக், ஈரான் மற்றும் ஜோர்டனுக்குச் செல்லும் முகமதியப் புனிதப் பயணிகளுக்கு உதவுவதற்காகவும், அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகளுக்காகவும், பம்பாய் துறைமுகத்தில் குழு ஒன்றை நிறுவுவதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் பத்தாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. இந்தச் சட்டம், ஹஜ் குழுச் சட்டம், 1959 என்று வழங்கப் பெறும். *குறுந் தலைப்பு.*

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,— *பொருள் வரையறைகள்.*

(அ) ''குழு'' என்பது, இந்தச் சட்டத்தின்படி அமைக்கப்பட்ட ஹஜ் குழு என்று பொருள்படும்;

(ஆ) ''புனிதப்பயணி'' என்பது, சௌதி அரேபியாவிற்கு, சிரியாவிற்கு ஈராக்கிற்கு, ஈரானுக்கு அல்லது ஜோர்டனுக்குப் புனிதப் பயணமாகச் செல்கிற அல்லது அங்கிருந்து திரும்புகிற முகமதியர் ஒருவர் என்று பொருள்படும்;

(இ) ''புனிதப்பயணக் கப்பல்'' என்பது, சூயஸ் அல்லாத செங்கடலிலுள்ள பிற துறைமுகம் எதற்கும் அல்லது எதிலிருந்தும், பம்பாய் துறைமுகத்திலிருந்து அல்லது துறைமுகத்திற்கு, புனிதப் பயணிகளை ஏற்றிச்செல்கிற அல்லது ஏற்றிச்செல்லவிருக்கிற கப்பல் ஒன்று என்று பொருள்படும்;

(ஈ) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப் பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்.

3. (1) மைய அரசாங்கம், இதற்கென அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதி முதற்கொண்டு செல்திறம் பெறுமாறு ஹஜ் குழு என்ற பெயரில் குழு ஒன்று நிறுவப்படுதல் வேண்டும். *ஹஜ் குழுவைக் கூட்டுருமமாகப் பதிவுசெய்தல்.*

(2) மேற்சொன்ன குழு, தொடர்ந்த நிலைப்பாட்டையும் ஒரு தனியுறு இலச்சினையையும் கொண்ட ஒரு கூட்டுருமக்குழுமமாக இருக்கும். மற்றும் மேற்சொன்ன பெயரால் அது வழக்கிடுதலும் அதன்மீது வழக்கிடப்படுதலும் ஆகும்.

4. (1) அந்தக் குழுவானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும், அவர்களாவர்:— *குழுவின் அமைப்பு.*

(அ) பம்பாய் சுங்க ஆட்சியர், பதவிவழி;

(ஆ) பம்பாய் துறைமுகப் பொறுப்பாட்சித் தலைவர், பதவிவழி;

(இ) பம்பாய் வணிகக் கப்பல் துறையின் முதன்மை அலுவலர்; பதவிவழி;

(ஈ) பெரும் பம்பாய்க்கான காவல் ஆணையர், பதவி வழி;

(உ) பெரும் பம்பாய்க்கான நகராட்சி ஆணையர், பதவிவழி;

---

1. நோக்கங்கள் மற்றும் காரணங்களின் விவரவுரைக்காக, 16–11–1959 தேதியிடப்பட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II, பிரிவு 2, பக்கம் 1161இக் காண்க.

(ஊ) பம்பாய் துறைமுக நல்வாழ்வு அலுவலர், பதவிவழி;

(எ) மைய அரசாங்கத்தினால் நியமனம் செய்யப்பட வேண்டிய இரண்டு உறுப்பினர்கள்;

(ஏ) நாடாளுமன்றத்தின் மூன்று உறுப்பினர்கள்; அவர்களில் இருவர் மக்கள்அவைத் தலைவரால், அதன் உறுப்பினர்களிடையே யிருந்து நியமனம் செய்யப்படுதலும், ஒருவர் மாநிலங்கள் அவைத்தலைவரால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து நியமனம் செய்யப்படுதலும் வேண்டும்;

(ஐ) [1][மகாராஷ்டிர] மாநில அரசாங்கத்தைச் சார்பாற்றம் செய்வதற்கு அந்த அரசாங்கத்தால் நியமனம் செய்யப்படவேண்டிய ஓர் உறுப்பினர்;

(ஒ) [1][மகாராஷ்டிர] மாநிலச் சட்டமன்ற அவைத்தலைவரால் நியமனம் செய்யப்படவேண்டிய அந்த அவையின் இரண்டு உறுப்பினர்கள்;

(ஓ) பெரும் பம்பாய் மாநகராட்சி மன்ற முகமதிய உறுப்பினர்களின் பரிந்துரையின்பேரில் [2][மகாராஷ்டிர மாநில அரசாங்கத்தால்] நியமனம் செய்யப்படவேண்டிய பெரும் பம்பாயின் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் இருவர்;

(ஔ) புனிதப் பயணிகளின் நலனில் நேரடியாகவும் செயல் திற னுடனும் அக்கறைக் கொண்டிருப்பதாக குழு உறுப்பினர்கள் கருதுகிற நலன்களைச் சார்பாற்றம் செய்வதற்குக் குழு உறுப் பினர்கள் அனைவராலும் இசைந்து தெரிவுசெய்யப்பட வேண்டிய மூன்று உறுப்பினர்கள்; அவர்களில் இருவர் ஷியா முகமதியர்களாக இருப்பர்.

(2) இந்தப் பிரிவின்படியான நியமனம் ஒவ்வொன்றும், அதிகார முறை அரசிதழில் மைய அரசாங்கத்தால் அது அறிவிக்கை செய்யப்பட்ட உடனேயே செல்திறம் பெறும்.

*உறுப்பினர்களை நியமனம் செய்தலும் இசைந்து தெரிவு செய்தலும்.*

5. (1) குழுவின் உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படும் முறையில் நியமனம் செய்யப்படவோ அல்லது இசைந்து தெரிவு செய்யப்படவோ வேண்டும்.

(2) குழுவின் உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டதற்கும், பிரிவு 4இன் உட்பிரிவு (1)இன் கூறு(ஔ) இல் சுட்டப்பட்ட உறுப்பினர்கள் இசைந்து தெரிவு செய்யப்பட்டதற்குப் பின்பு, கூடிய விரைவில், மைய அரசாங்கம், நியமனம் செய்யப்பட்ட மற்றும் இசைந்து தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் அனைவரின் பெயர்ப்பட்டியலொன்றை அதிகாரமுறை அரசிதழில் வெளியிடுதல் வேண்டும்:

வரம்புரையாக: உறுப்பினர் ஒருவரைத் தேர்ந்துகொள்ளத் தவறுவ தானது, இந்த உட்பிரிவில் வகைசெய்யப்பட்டவாறு நியமனம் செய்வதி லிருந்து அல்லது உறுப்பினர் தன் பட்டியலை வெளியிடுவதிலிருந்து மைய அரசாங்கத்தைத் தடை செய்யாது:

மேலும் வரம்புரையாக: புதிய குழு ஒன்றின் உறுப்பினர்கள் பட்டியல், மாற்றீடு செய்கிற குழு உறுப்பினர்களின் பட்டியல் வெளியிடப்பட்ட தேதி யிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிவுறுவதற்கு முன்பு வெளியிடப்படுதலாகாது.

*தலைவர் மற்றும் துணைத்தலைவர்.*

6. (1) பிரிவு 5இன் உட்பிரிவு (2)இன்படி குழு உறுப்பினர்களின் பட்டியல் வெளியிட்டதற்குப் பின்பு, மைய அரசாங்கம், பணிப்புரையில் குறித்துரைக்கப்படும் காலத்திற்குள், குழு உறுப்பினர்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந் தெடுக்கும்படி குழுவினைப் பணித்தல் வேண்டும்.

(2) அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட காலத்திற்குள், அந்தக் குழு, தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கத் தவறினால், மைய அரசாங்கம், குழு உறுப்பினர் ஒருவரை அதன் தலைவராக அமர்த்தலாம்.

---

1. "பம்பாய்" என்ற சொல்லுக்கு மாற்றாக, பம்பாய் மறுஅமைப்பு ஆணை, 1961 மூலம் அமைக்கப்பட்டது. (ஜி.எஸ்-ஆர். 346, 15-3-1961 தேதியிடப்பட்டது). (1-5-1960 முதல் முன்மேவு செல்திறம் பெறுமாறு)

2. "பம்பாய் மாநில அரசாங்கம்" என்பதற்கு மாற்றாக மேற்படிச் சட்டத்தால் அமைக்கப் பட்டது.

(3) தலைவர், வகுத்துரைக்கப்படலாகும் அதிகாரங்களைச் செலுத்துவார் மற்றும் கடமைகளை ஆற்றுவார்.

(4) குழுவானது, தன் உறுப்பினர்களிடையேயிருந்து துணைத் தலைவர்களாக இரண்டுக்கு மேற்படாத உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். அவர், குழுவால் இதற்கெனத் துணை விதிகளின் மூலம் தீர்மானிக்கப்படலாகும் அதிகாரங்களைச் செலுத்துவார், மற்றும் கடமைகளை ஆற்றுவார்.

(5) தலைவர் மற்றும் துணைத் தலைவரின் அமர்த்துகை மற்றும் தேர்வு, மைய அரசாங்கத்தால் அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

பதவிக் காலம்.

7. (பதவி வழி உறுப்பினர்கள் மற்றும் தற்செயல் காலியிடங்களை நிரப்புகிற உறுப்பினர்கள் அல்லாத பிற) குழு உறுப்பினர்களின் பதவிக் காலமானது, பிரிவு 5இன் உட்பிரிவு (2)இன்படி உறுப்பினர்கள் பட்டியல் வெளியிடப்பட்டதை அடுத்து வரும் நாளன்று தொடங்கி, அடுத்தக் குழு உறுப்பினர்களின் பட்டியல் வெளியிடப்பட்ட தேதியன்று முடிவடைகிற மூன்று ஆண்டுகளுக்குக் குறையாததாக இருக்கும்.

புதிய குழுக்களை அமைத்தல்.

8. (1) பிரிவு 5இன் உட்பிரிவு (2)இன்படி குழு ஒன்றின் உறுப்பினர்கள் பட்டியல் வெளியிடப்பட்டதற்குப் பின்பு மூன்றாண்டுகள் கழிவுறுவதற்கு முன்பு அல்லது கழிவுற்றதற்குப் பின்பு, மைய அரசாங்கம், உகந்ததெனக் கருதும் நேரத்தில், மைய அரசாங்கம், [1]புதுக்குழுவின் உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கும் இசைந்து தெரிவு செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுத்தல் வேண்டும் அல்லது எடுக்கும்படி செய்தல் வேண்டும்.

(2) நபர் எவரும், அவர் குழுவின் ஓர் உறுப்பினராக இருக்கிறார் அல்லது இருந்து கொண்டிருக்கிறார் என்ற காரணத்தின் பேரில், புதுக் குழுவிற்கு நியமனம் செய்யப்படுவதற்கு அல்லது இசைந்து தெரிவு செய்யப்படுவதற்குத் தகுதியற்றவர் ஆகமாட்டார்.

குழுக்களின் கடமைகள்.

9. (1) (அ) புனிதப் பயணியர்க்குத் தேவையான தகவலைத் திரட்டுவதும் பரப்புவதும்,

(ஆ) அம்மை குத்துதல், நோய்த் தடுப்பு ஊசி போடுதல், மருத்துவ ஆய்வு மற்றும் இசைவுச் சீட்டுகளையும் கடவுச் சீட்டுகளையும் வழங்குதல் உள்ளடங்கலான பொருட்பாடுகள் அனைத்திலும் புனிதப் பயணத்தை மேற்கொள்ளும் போது அல்லது அதிலிருந்து திரும்பும்போது, பம்பாய் நகரத்திலும் துறைமுகத்திலும் புனிதப் பயணியர் தங்கியிருக்கும்போதும் அவர்களுக்கு அறிவுரை கூறுவதும் உதவி செய்வதும் மற்றும் அத்தகைய பொருட்பாடுகளில் தொடர்புடைய வட்டார அதிகார அமைப்புகளுடன் ஒத்துழைப்பதும்,

(இ) ஏழ்மையான புனிதப் பயணியர்க்குத் தீருதவி அளிப்பதும்,

(ஈ) புனிதப் பயணியர்க்குப் பயண வசதிகளைப் பெறும் நோக்கத்திற்காக இருப்பூர்தியங்கள், கப்பல் நிறுவனங்கள், வான்வழி அமைப்புகள் மற்றும் பயண முகவாண்மைகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதும் ஒத்துழைப்பதும்,

(உ) புனிதப் பயணியர் கப்பல்களில், கப்பல் நிறுவனங்களால் வேலைக்கமர்த்தப்படுவதற்காகப் பொருத்தமான வழிகாட்டிகளைக் கண்டுபிடிப்பது,

(ஊ) புனிதப் பயணியரின் குறைகளையும், [1]இந்திய வணிகக் கப்பல் சட்டம், 1923இன் வகையங்களை நிறைவேற்றுவதில் புனிதப் பயணக் கப்பலில் தலைவர் அல்லது சொந்தக்காரர் செய்ய நேர்ந்த முறைகேடுகள் அல்லது விடுகைகள் எவற்றையும், தொடர்புடைய அதிகாரஅமைப்புகளின் கவனத்திற்குக் கொண்டுவருவது மற்றும் தீர்வழிகளைக் கூறுவது,

(எ) கப்பலின் தலைவர் அல்லது சொந்தக்காரரிடம் புனிதப் பயணிகளின் குறைகளைச் சார்பாற்றம் செய்வதற்கு புனிதப்பயணக் கப்பலில் ''அமிரூல் ஹகு'' என்ற ஒரு புனிதப் பயணியை அமர்த்துவது,

(ஏ) பொதுவாக, புனிதப் பயணியரின் நலன்களைக் கவனித்துக் கொள்வது, மற்றும்

---

1. தற்போது, வணிகக் கப்பல் சட்டம், 1958 (44/1958)ஐக் காண்க.

(ஐ) புனிதப் பயணப் போக்குவரவு தொடர்பாக வகுத்துரைக்கப்படும் பிற கடமைகளை ஆற்றுவது

குழுவின் கடமைகளாகும்.

(2) இந்தப் பிரிவின்படி சுமத்தப்பட்ட கடமைகளை ஆற்றுகையில் குழுவிற்குத் தகுமான உதவி அனைத்தையும், மைய அரசாங்கம் அளித்தல் வேண்டும்.

*குழுவின் கூட்டங்கள்.*

10. (1) குழுவானது, ஹஜ்-நாளுக்கு முந்திய நான்கு மாதங்களின் போதும், ஹஜ்-நாளுக்குப் பிந்திய இரண்டு மாதங்களின் போதும், குறைந்தது ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு முறையும், ஆண்டில் எஞ்சிய காலத்தின் போது குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையும் கூடுதல் வேண்டும்.

(2) கூட்டம் எதிலும், குறைவெண்ணை அமைப்பதற்குத் தேவைப்படுகிற உறுப்பினர்களின் எண்ணிக்கையானது, ஆறாக இருக்கும்.

(3) அனைத்துப் பொருட்பாடுகளும், வந்திருக்கிற உறுப்பினர்களின் பெரும்பான்மையான வாக்குகளால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். மற்றும் வாக்குகள் சமமாக இருக்கும் தேர்வில், தலைவர் அல்லது தலைமை வகிக்கிற பிறநபர் அறுதிசெய் வாக்கு ஒன்றைப் பெற்றிருப்பார்.

*காலியிடங்கள் முதலியன குழுவின் செயல்கள் அல்லது நடவடிக்கைகளைச் செல்லுந்தன்மையற்றனவாக ஆக்காது.*

11. குழுவின் செயல்கள் அல்லது நடவடிக்கைகள் எவையும், அதன் உறுப்பினர்களிடையே காலியிடம் எதுவும் இருக்கிறது அல்லது, அதன் அமைப்பில் குறைபாடு எதுவும் இருக்கிறது என்ற காரணத்தால் மட்டுமே செல்லுந்தன்மையற்றவை ஆகாது.

*நிருவாக அலுவலர் மற்றும் பிற பணிபுரிபவர்கள்.*

12. (1) மைய அரசாங்கமானது, குழுவினைக் கலந்தாய்வு செய்து அதன் நிருவாக அலுவலராக நபர் ஒருவரை அமர்த்துதல் வேண்டும், அவர், குழுவின் செயலாளராகவும் இருப்பார்.

(2) குழுவானது, மைய அரசாங்கத்தின் ஒப்பளிப்பிற்கு உட்பட்டு, இந்தச் சட்டத்தின்படி அதனுடைய கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்குத் தேவையென அது கருதும் பிற பணிபுரிபவர்களை அமர்த்துதல் வேண்டும்.

*துணைக்குழுக்கள் மற்றும் புனிதப்பயணியர் கப்பலை ஆய்வு செய்தல்.*

13. (1) குழுவானது, புனிதப்பயணியரின் கப்பல்களை ஆய்வு செய்வதற்கு அது பொருத்தமென நினைக்கிற எண்ணிக்கையில் உறுப்பினர்களைக் கொண்டதாயிருக்கிற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துணைக் குழுக்களை அமர்த்துதல் வேண்டும்.

(2) அத்தகைய துணைக் குழு எதுவும், புனிதப் பயணியர் கப்பலை ஆய்வுசெய்யும்போது, இந்திய வணிகக் கப்பல் சட்டம், 1923[1]இன் பிரிவு 151இன்படி துறைமுகத்திற்காக அமர்த்தப்பட்ட உறுதிச்சான்றிடும் அலுவலர் அல்லது கப்பலின் அளவையர் அல்லது உறுதிச்சான்றிடும் அலுவலரால் ஆட்பேர் உரிமையளித்து அனுப்பப்பட்ட பிற நபர் உடன்செல்லுதல் வேண்டும்.

(3) குழுவின் நிருவாக அலுவலர், அல்லது உட்பிரிவு (1)இன்படி அமர்த்தப்பட்ட துணைக் குழு ஒன்று பம்பாய் துறைமுகத்திலிருந்து புறப்படுவதாக விளம்பரப்படுத்தப்பட்ட அல்லது புறப்பட முற்பாடு செய்யப்பட்ட அல்லது பம்பாய் துறைமுகத்திற்குத் திரும்பியிருக்கிற புனிதப்பயணியர் கப்பலில் நுழைந்து ஆய்வு செய்யலாம்.

(4) அவ்வாறு ஆய்வு செய்வதற்குத் தகுமான வசதிகளை அளிக்கத் தவறுகிற புனிதப்பயணியர் கப்பலொன்றின் ஒரு தலைவர் அல்லது அலுவலர் எவரும், ஐந்நூறு ரூபாய்வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

(5) மாகாணத் தலைநகர் குற்றவியல் நடுவர் அல்லது முதல் வகுப்புக் குற்றவியல் நடுவர் ஒருவர் அல்லாத பிற குற்றவியல் நடுவர் எவரும் உட்பிரிவு (4)இன்படி தண்டிக்கப்படத்தக்க குற்றச்செயல் ஒன்றை விசாரணைக்கெடுத்துக் கொள்ளுதல் ஆகாது மற்றும் அத்தகைய குற்றவியல் நடுவர், குழுத்தலைவரின் எழுத்து வடிவிலான முறையீட்டின்பேரில் மட்டுமே அத்தகைய குற்றச்செயலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(6) குழுவானது, அது பொருத்தமென நினைக்கலாகும் நோக்கங்களுக்காக பிற துணைக்குழுக்களை அமர்த்தவும் செய்யலாம், மற்றும் அத்தகைய துணைக்குழு எதுவும், குழுவினால் இதற்கென வகுக்கப்பட்ட துணைவிதிகளால் தீர்மானிக்கப்படலாகும் எண்ணிக்கையில் உறுப்பினர்களையும் பிற நபர்களும் அடங்கியதாயிருத்தல் வேண்டும்.

---

1. வணிகக்கப்பல் சட்டம், 1958 (44/1958)இன் பிரிவு 238-ஐக் காண்க.

14. குழுவானது ஹஜ் நிதியம் என்று வழங்கப்படும் தனது சொந்த நிதியம் ஒன்றைக் கொண்டிருக்கும், மற்றும் பின்வரும் தொகைகள் அதனுடைய கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும் :— ஹஜ் நிதியம்.

(அ) இந்திய வணிகக் கப்பல் சட்டம், 1923[1] பிரிவு 208 (இ) இன் கூறு (ஆ)இன்படி புனிதப்பயணியர்களால் செய்யப்பட்ட வைப்பீட்டுத் தொகைகள் அனைத்தின் பேரிலான வட்டி ;

(ஆ) இந்திய வணிகக் கப்பல் சட்டம், 1923[2] பிரிவு 213இன்படி வகுக்கப்பட்ட விதி எதற்குமிணங்க, புனிதப்பயணியரின் இசைவுச் சீட்டுகளைப் பதிவு செய்வதற்காக விதிக்கப்பட்ட கட்டணங்கள் ;

(இ) இறந்துபோன புனிதப் பயணியர்களின் அசைவியல் சொத்துக்களை விற்பனை செய்வதிலிருந்து பெறப்பட்ட தொகைகள், மற்றும் கோரப்படாதிருந்து அரசுடைமையாயிருக்கிற இறந்துபோன புனிதப் பயணியர்களால் விட்டுச்செல்லப்பட்ட தொகைகள் ;

(ஈ) புனிதப்பயணியர் கப்பல் ஒன்றில் போக விரும்புகிற புனிதப் பயணியர்களின் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும், பார்வையாளர் இசைவுச் சீட்டுகளை வழங்குவதற்காக விதிக்கப்படும் கட்டணம் எதுவும் ;

(உ) ஏழையான புனிதப் பயணியர் நிதியம் என்றழைக்கப்படும் நிதியத்தின் கணக்கில் இந்தச் சட்டத்தின் தொடக்க நிலையில் இருப்பிலுள்ள தொகை :

வரம்புரையாக : அத்தகைய தொகையானது, ஏழையான புனிதப் பயணியருக்காக மட்டுமே குழுவால் பயன்படுத்தப்படுதல் வேண்டும் ;

(ஊ) தனிப்பட்ட வளஆதாரங்களிலிருந்து ஹஜ் குழுவால் பெறப்பட்ட தொகைகள் அனைத்தும் ; மற்றும்

(எ) ஹஜ் நிதியத்திற்கு மைய அரசாங்கத்தால் அல்லது ஏதேனும் மாநில அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட தொகைகள் அனைத்தும்.

15. இந்தச் சட்டத்தின்படி குழு நிறுவப்படுவதற்கு முன்பு, துறைமுக ஹஜ் குழுக்கள் சட்டம், 1932இன்படி அமைக்கப்பட்ட கல்கத்தா துறைமுக ஹஜ் குழுவினால் மற்றும் பம்பாய் துறைமுக ஹஜ் குழுவினால், சொந்தமாகக் கொண்டிருக்கப்பட்ட அல்லது கையகப்படுத்தப்பட்ட சொத்து, சொத்திருப்புகள் மற்றும் நிதியங்கள் அனைத்தும் அவ்வாறு நிறுவப்பட்டதன் பேரில், குழுவிடம் உற்றமைந்திருந்து பிரிவு 14இல் சுட்டப்பட்ட ஹஜ் நிதியத்தின் பகுதியாக அமையும். குழுவிடம் சொத்து உற்றமைதல்.

16. ஹஜ் நிதியமானது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதிகள் எவற்றிற்கும் உட்பட்டு, குழுவின் கட்டாள்கை மற்றும் மேலாண்மைக்கு உட்பட்டிருக்கும், மற்றும் பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும், அவையாவன : ஹஜ் நிதியத்தைப் பயன்படுத்துதல்.

(அ) குழுவின் நிருவாக அலுவலர் மற்றும் பிற பணிபுரிவோர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள் ;

(ஆ) பிரிவு 9 இல் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்கு இடையுறுவான கட்டணங்கள் மற்றும் செலவுத் தொகைகளைச் செலுத்துதல் ;

(இ) பிரிவு 17இன்படி வகுக்கப்பட்ட விதிகளில் குறித்துரைக்கப்பட்ட பிற நோக்கங்கள் எவையும்.

17. (1) மைய அரசாங்கமானது, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளை வகுக்கலாம். விதிகளை வகுப்பதற்கு அதிகாரம்.

---

[1] வணிகக் கப்பல் சட்டம், 1958 (44/1958)இன் பிரிவு 273-ஐக் காண்க.

[2] வணிகக் கப்பல் சட்டம், 1958 (44/1958) இன் பிரிவு 282 ஐக் காண்க.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம்,—

(அ) குழு உறுப்பினர்களை நியமனம் செய்தலும் இசைந்து தெரிவு செய்தலும்;

(ஆ) குழுவின் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான அல்லது இருப்பதற்கான தகுதிக்கேடுகள் ;

(இ) உறுப்பினர்களைத் தேர்ந்து கொள்வது தொடர்பான ஐயங்களும் பூசல்களும் தீர்மானிக்கப்படும் முறை ;

(ஈ) குழுத்தலைவர் மற்றும் பிற உறுப்பினர்களின் பதவியிலுள்ள தற்செயல் காலியிடங்களை நிரப்புதல் ;

(உ) குழுவின் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்களை அகற்றுதல் மற்றும் அவர்கள் பதவியை விட்டு விலகுதல் ;

(ஊ) தலைவரின் பதவிக்காலம் மற்றும் அவரது அதிகாரங்களும் கடமைகளும் ;

(எ) குழுவிடம் ஒப்படைக்கப்படும் கடமைகள் ;

(ஏ) நிருவாக அலுவலரின் அதிகாரங்களும் கடமைகளும் மற்றும் குழுவினுடைய நிருவாக அலுவலர் மற்றும் பிற பணிபுரிவோர்களின் பணிவரைக்கட்டுகள் ;

(ஐ) ஹஜ் நிதியத்தின் பாதுகாப்பு மற்றும் அதிலுள்ள நிலுவைகளை முதலீடு செய்தல் ;

(ஒ) எந்த நோக்கங்களுக்காக ஹஜ் நிதியம் பயன்படுத்தப்படலாகுமோ அந்த நோக்கங்கள் ;

(ஓ) மைய அரசாங்கத்தின் முன் ஒப்பளிப்பின்றி, குழு செய்ய நேரிடும் செலவுத்தொகையின் வரம்பு ;

(ஔ) குழுவினால் வைத்துவரப்படவேண்டிய கணக்குகள், மற்றும் அத்தகைய கணக்குகளின் தணிக்கை ;

(க) குழுவின் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்தல், பணிந்தனுப்புதல் மற்றும் அதன் ஒப்பேற்பு ;

(ங) குழுவினால் பணிந்தனுப்பப்பட வேண்டிய விவரக் குறிப்புகள், விவர உரைகள் மற்றும் விவர அறிக்கைகள் ;

(ச) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும் பிற பொருட்பாடு எதுவும் ;

(3) இந்தப் பிரிவின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத்தொடராகவோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத்தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு காலஅளவிற்கு அமர்வில் இருக்கையில் அதன்முன் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அடுத்துப்பின்வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன் பின்பு அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும், எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

18. குழுவானது, இந்தச் சட்டத்திற்கு அல்லது அதன்படி வகுக்கப்பட்ட துணை விதிகளுக்கு முரணாக இல்லாது— துணை விதிகளை வகுப்பதற்கு அதிகாரம்.

(அ) துணைத்தலைவரின் தேர்தல் முறையை வகுத்துரைக்கிற,

(ஆ) துணைத் தலைவரின் பதவிக்காலத்தையும், அதிகாரங்களையும் கடமைகளையும் வகுத்துரைக்கிற,

(இ) துணைத் தலைவர் ஒருவர் அகற்றப்படுவதை அல்லது பதவி விலகுவதை ஒழுங்குறுத்துகிற மற்றும் துணைத் தலைவர் பதவியில் ஏற்படும் தற்செயல் காலியிடங்களை நிரப்புவதற்கான,

(ஈ) குழுவின் கூட்டங்களைக் கூட்டுவதையும் அதன் அலுவல் நடப்பு முறையையும் ஒழுங்குறுத்துகிற,

(உ) பேணிவரப்பட வேண்டிய பதிவணங்களையும் பதிவுக்கட்டுகளையும் வகுத்துரைக்கிற,

(ஊ) அதனுடைய நடவடிக்கைகளையும் புனிதப்பயணியர்களுக்கு நலன்தரும் பொருட்பாடு எதனையும் வெளியிடுவதற்கு வகை செய்கிற, மற்றும்

(எ) இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறமளிக்க தேவையெனக் குழு கருதுகிற பிற பொருட்பாடு எதற்கும் வகைசெய்கிற

துணை விதிகளை வகுக்கலாம்.

19. (1) துறைமுக ஹஜ் குழுக்கள் சட்டம், 1932 ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. நீக்கறவு மற்றும் காப்புரைகள்.

(2) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்டிருந்த போதிலும், மேற்சொன்ன சட்டத்தின்படி அமைக்கப்பட்ட பம்பாய்த் துறைமுக ஹஜ் குழுவானது, இந்தச் சட்டத்தின்படி குழு அமைக்கப்படும்வரை, இந்தச் சட்டம் பிறப்பிக்கப்படாதிருந்தாற் போன்று தொடர்ந்து செயற்படும் மற்றும் அத்தகைய குழு அமைக்கப்பட்டதன் பேரில், பம்பாய்த் துறைமுக ஹஜ் குழு கலைக்கப்பட்டது ஆகும்.